For all Ceremonies
At your homes
Our Service available

**OLI ILLAM**

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

தாரப் பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒலி இல்லம்"

210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 17 செவ்வாய்க்கிழமை (01 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 94

புலிகள் — ஸ்ரீலங்கா அரசு இரு தரப்பையும்

## பேச்சுக்கு இணங்க வைக்க திரும்பவும் நோர்வே முயற்சி!

கொழும்பு, மார்ச் 1

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக, சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் பேச்சுக்கு இணங்க வைக்கும் முயற்சியில் மீண்டும் நோர்வே ஈடுபட்டிருக்கிறது.

இது குறித்து நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் உள்ள தமது செய்தியாளர் சிசிர விஜேசிங்கவை மேற்கோள் காட்டி கொழும்பில் இருந்து வெளிவரும் "த ஐலண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியான அப்பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான தமது விருப்பத்தை சோடி காட்டும் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயர்பீடம் விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்காக உத்தியோகப்பற்றற்ற முறையில் நோர்வே அரச வட்டாரங்கள் எடுத்துக் கொண்ட முன் முயற்சியைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பு வெளியாகவிருக்கிறது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடைமுறைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி முன்னாலி

(4ஆம் பக்கம் பார்க்க)

### புக்காரா நோட்டம்

நேற்று அதிகாலை 3 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று குடாநாட்டு வான் பரப்பில் பல தடவைகள் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

பலாலி, ஏழாலை, சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை மற்றும் பளை, இளாலி உள்ளிட்ட பகுதிகளை சுற்றி வட்டமிட்ட விமானத்தின் சத்தத்தைக் கேட்டு பதற்றமடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடினர்.

[த-13-15-117-143-162]

## 5 பௌத்த பீட பிக்குகளுடனும் ஆரியரத்ன இம்மாதம் வருவார்

கொழும்பு, மார்ச் 1

"இம்மாதம் நான் யாழ்ப்பாணம் செல்லும்போது ஐந்து நிக்காயாக்களையும் சேர்ந்த ஐந்து பௌத்த குருமார்களை என்னுடன் அழைத்துச் செல்வேன்"

—இப்படிக் கூறியுள்ளார் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தினா.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடபகுதி மக்களும், தென்பகுதி மக்களும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இந்த இரு தரப்பினருக்கும் இடையில் துண்டிக்கப்பட்டுள்ள உறவை மீண்டும் ஏற்படுத்தவேண்டும். அதனைச் செய்வதே எனது நோக்கம்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நல்லுறவு, நல்லெண்ணம் வளர்ந்து வருகிறது என்பதற்கு அத்தாட்சியாகவே இரண்டு பொலிஸார் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது ஓர் ஆரம்ப நடவடிக்கையே. எதிர்காலத்தில் இந்த உறவு மேலும் வளர இருதரப்பினரும் விட்டுக்கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என நம்புகிறேன்.

இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-8)

(மற்றொரு பேட்டி 3 ஆம் பக்கத்தில்)

## விடுதலைப் புலிகள் அதிரடி! மணலாறில் 4 படையினர் பலி!!

யாழ்ப்பாணம், மார்ச் 1

மணலாறு பராக்கிரமபுர இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள காவலரண் மீது நேற்றுக் காலை 8-55 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய மூன்று நிமிட நேரத் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மூவரும் துணைப்படைச் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தோரிடமிருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ரி. 81 துப்பாக்கிகள் — 3
- ★ அதற்குரிய மகஸின் — 8
- ★ நடுத்தர ரவைகள் — 406
- ★ சப்பாத்துக்கள் — 4 சோடி
- ★ தலைக் கவசம் — 2
- ★ ரி.வி கிளைமோர் — 1
- ★ வயர் றோல் — 1
- ★ கிட் பாக் — 2
- ★ வானொலி பெட்டி — 1
- ★ இராணுவ பெல்ட் — 2

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-த)

## பெரும் இராணுவ நடவடிக்கை மணலாறில் நடத்தத் திட்டம்

மணலாறுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவக் கொமாண்டோக்களும், இராணுவத்தினரும் இணைந்து மிகப்பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல்களை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதே மேற்படி இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கமாக இருக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-த)

## துப்பாக்கி முனையில் தேர்தல் செய்தியாளர்கள் விமர்சனம்

கொழும்பு, மார்ச் 1

கிழக்கு மாகாணத்தில் எவ்வளவு அதிகம் பேர் இன்றைய தேர்தலில் வாக்களிக்கின்றனரோ அவ்வளவு தூரம் மக்கள் இராணுவத்துக்கு ஆதரவாக இருப்பதாகக் கணக்கிடப்படும் என்பதால், பொதுமக்கள் தேர்தலில் வாக்களிக்க இராணுவம் மிரட்டி வருகின்றது என்றும்—

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று இராணுவம் வற்புறுத்துகின்றது என்றும்—

துப்பாக்கி முனையில் நடத்தப்படும் தேர்தல் போன்று இது காணப்படுகின்றது என்றும்—

செய்தியாளர்கள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

பல வேட்பாளர்களும் பொதுமக்களும் இராணுவத்தாலும் கட்சிகளாலும் அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும்—

பயந்துபோன மக்களில் சிலர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுவதாகவும் கூறப்படுகிறது.

தேர்தல் சூழ்நிலை சரியில்லை என்று எமக்குத் தெரியும். ஆனாலும் நாம் போட்டியிடாவிட்டால் அரசு எவ்வித எதிர்ப்பும் இன்றி உள்ளூராட்சி அமைப்புக்களைக் கைப்பற்றிவிடும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

இத்தேர்தல் ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கும் ஒரு தேர்தல் என்றும்—

ஆளும் கட்சிக்குப் பலம் சேர்க்க இராணுவம் துணை போகிறது என்றும் ஈ. பி. ஆர். எல். எவ். கடுமையாக விமர்சித்துள்ளது.

இராணுவம் ஆளும்கட்சிக்காகத் தேர்தல் விளம்பரங்களை விநியோகிப்பதும் வாக்குச்சீட்டுகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் கள்ள வாக்குப்போட மிகவும் வசதியாக இருக்கும் என்றும் ஈ. பி. ஆர். எல். எவ். குற்றஞ்சாட்டிறது.

பொதுமக்கள் எவருக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

### அதிகாலை முதல் முடிவு வெளியாகும்

கொழும்பு, மார்ச் 1

கிழக்கு மற்றும் வவுனியாவில் இன்று நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களின் முதலாவது முடிவு நாளை அதிகாலையில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீசில்வா தெரிவித்திருக்கிறார். (உ-6)

## மீனவர் மீது ஹெலித்தாக்கு! 2 பேர் பலி!

### கேரதீவுக் கடலில் சம்பவம்

பூநகரி நாகதேவன்துறைக்கும் கேரதீவுக்கும் இடையில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது நேற்று மாலை 4.30 மணியளவில் ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் இரு மீனவர்கள் உயிரிழந்தனர். மற்றொருவர் படுகாயமுற்றார். நான்காவது மீனவர் கடலில் பாய்ந்து தப்பினார். வள்ளம் சேதமுற்றது.

நாவாலி தெற்கைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லையா (வயது 65), வே. நடராசா (வயது 72) ஆகிய இருவருமே உயிரிழந்தனர். உயிரிழந்த செல்லையாவின் மகன் சிவநேசச்செல்வன் (வயது 34) படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த மீனவர் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தாக்குதலில் காயமுற்றவரையும், உயிரிழந்த இருவரின் சடலங்களையும் தனது இளப்புக் கரையில் வாடி அமைத்துத் தங்கியிருந்த மீனவர்கள் சென்று வள்ளத்துடன் மீட்டு வந்தனர்.

# இரு தரப்பினரிடம் இருந்தும் நல்லெண்ண சமிக்ஞைகள்

### முச்சந்தி முரளி



கூட்டம் வராமலே அவை பறந்து போட்டி நடந்தன மந்திரி தானும் வாக்கு வரும்......!

## சமாதான முயற்சியில் ஈடுபடும் கத்தோலிக்க மதகுரு தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 01

ஸ்ரீலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் வளர்க்குமுகமாக இப்பொழுது பரஸ்பர சமிக்ஞை காட்ட முன்வந்துள்ளனர்.

சமாதான முயற்சிகளை மேற்கொண்டு கடந்த ஜனவரியில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய கத்தோலிக்க ஆயர் குழுவில் இடம் பெற்றிருந்த மதகுரு ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார்.

"மீன்பிடி வலயத் தடையை அரசாங்கம் நீக்க முன் வந்திருப்பதும் —

"தாண்டிக்குளம் ஊடாக வடபகுதிக்கு அத்தியாவசிய, உணவுப் பொருள்கள் தங்கு தடையின்றி செல்வதை உறுதிப்படுத்த கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் களஞ்சியம் ஒன்றை வவுனியாவில் திறக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கையும் —

அரசாங்கம் காட்டும் நல்லெண்ணச் சமிக்ஞையின் ஒரு பகுதியே."

"நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் வளர்க்கும் முகமாக இரு சாராரும் இப்பொழுது பரஸ்பரம் சமிக்ஞை காட்ட முன்வந்துள்ளார்கள்.

"அதன் ஒரு சமிக்ஞையே 1990 ஜூன் மாதம் முதல் தமது பொறுப்பில் வைத்திருந்த இரு பொலிஸாரை விடுவிக்க புலிகள் முன்வந்தமையாகும்" —

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## ம. எண்ணெய், மாவுடன் கப்பல்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மார்ச். 1

ஏழாயிரத்து 590 பரல் மண்ணெண்ணெய்யுடன் "மாஹோர" கப்பலும் ஆயிரத்து 850 மெற்றிக் தொன் மாவுடன் "ஹெற்தல" கப்பலும் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தன.

இக்கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகின. (உ-3-173)

செஞ்சிலுவை ஏற்பாட்டில்

## திருமலை – பருத்தித்துறை கப்பல் சேவை இவ்வாரம்

யாழ்ப்பாணம், மார்ச். 1

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் ஏற்பாட்டில் விசேட கப்பல் சேவை ஒன்று எதிர்வரும் 5 ஆம் திகதி திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நடத்தப்படவிருக்கிறது.

'குணா' கப்பல் சேவையை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு நிறுத்திய பின்னர்—

பாதிக்கப்பட்ட நோயாளர்கள் மற்றும் தமது குடும்பங்களுடன் மீள இணைய உள்ளோரைக் கூட்டிச் செல்வதற்காகவே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இக்கப்பல் சேவையை விசேடமாக ஒழுங்கு செய்திருக்கிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து 90 பயணிகளுடன் புறப்படும் இக்கப்பல் மறுநாள் காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகள் இராணுவ முகாம்களில்!

யாழ்ப்பாணம், மார்ச். 1

மூதூர் உட்பட கிழக்கின் பல பகுதிகளிலும் உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி வாக்காளருக்கு வழங்கவென தயாரிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. அவை அவ்வப் பகுதி இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் தேர்தல் தினத்தன்று (இன்று) காலை தத்தமது பகுதிக்கு வந்து வாக்காளர் அட்டைகளைப் பெற்றுச் சென்று வாக்களிக்குமாறு இராணுவத்தினர் கேட்டிருக்கின்றனராம்.

வாக்காளர் அட்டைகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் நடைபெற்ற

## ரணிலின் கூட்டத்துக்கு மக்கள் வரவில்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 1

வவுனியாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றிய ஐ.தே.க. பிரசாரக் கூட்டத்திற்கு மக்கள் பெருமளவில் வருகை தரவில்லை.

கடந்த சனிக்கிழமை முற்பகல் வவுனியா நகரசபை மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது

அங்கு போடப்பட்டிருந்த கதிரைகளில் முக்கால்வாசி கதிரைகள் வெறுமையாகக் கிடந்தன என்றும் —

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் அங்கு பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர் என்றும் —

வவுனியாவில் இருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

அன்று காலை 9-30 மணியளவில் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றிய பிரதமர் அன்று பிற்பகல் 1-30 மணி அளவிலேயே ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு திரும்பினார்.

பிரதமர் வவுனியாவில் தங்கிநின்ற வேளை —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. நகருக்கு ஹெலி மூலம் வாக்குப் பெட்டிகள் வரும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு முடிந்ததும் ஏழு இடங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் மட்டக்களப்பு நகருக்கு எடுத்து வரப்படவிருப்பதாக பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் ஹொஹான் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இன்று மாலை வாக்களிப்பு முடிந்த கையோடு—

கதிரவெளி, வாகரை மகா ஓயா, ஆயித்தியமலை, பாவற்கொடிச்சேனை, கொக்கட்டிச்சோலை, அம்பிளாந்துறை ஆகிய இடங்களில் இருந்து வாக்குப்பெட்டிகள் ஹெலி மூலம் எடுத்துவரப்படவிருக்கின்றன.

வாக்குப் பெட்டிகளுடன் குறித்த வாக்குச் சாவடிகளின் தலைமை வாக்களிப்பு உத்தியோகஸ்தரும், இரு பொலிஸாரும் ஹெலியில் கூட வருவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஆலங்கேணி விமானத் தாக்குதலில் சிக்கி தப்பி யாழ். வந்து சேர்ந்த ஜேர்மன் பெண்

### உயிர் பிரிந்து மீண்ட உணர்வு அனுபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்திய போது டிராக்டரில் இருந்த ... ... என்னுடன் வந்தவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போது, விமானம் உறுமும் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. நாங்கள் மரம் ஒன்றின் கீழ் பாதுகாப்புத் தேடினோம்.

பயங்கரச் சத்தம் காதைப் பிளந்தது. பெரும் வெளிச்சமும் தெரிந்தது. கடவுளைப் பிரார்த்தித்தபடி மரத்தின் அடியில் படுத்திருந்தேன்.

விமானம் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்ற பின்னர் உயிர் பிரிந்து மீண்ட உணர்வு வந்தது.

ஆலங்கேணிப் பகுதியில் கடந்த இரவு நடந்த விமானத் தாக்குதலை நேரில் கண்டும், அதிலிருந்து தப்பி

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு மாத பிறவுண் பேட்டுக் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப் பண்ணை, ஓராம்கட்டை, பிரதானவீதி, பருத்தித்துறை.
[29648]

## சாதகக் குறிப்பு

நோர்வே, சிங்கப்பூர், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு சாதகக் குறிப்பு உடனே எழுதிக் கொள்ளலாம். சிவா, இல. 712, நாவலர் வீதி, அரியாலை.
(29668)

## தேவை

நல்ல நிலையில் உள்ள கையால் இயக்கும் முச்சக்கர சைக்கிள் தேவை. தொடர்பு: ஆ. நன்னித்தம்பி, 69/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (7020)

## மணமகள் தேவை

யாழ். இந்து 33 வயது நல்ல குடும்பத்தைச் சேர்ந்த உதயச் செவ்வாய் 5 அடி 8 அங். உயரமுள்ள O/L வரை படித்த நற்குணமுடைய தனிப்பட்டவருக்கு இலங்கை/வெளிநாட்டில் செவ்வாய்க் குற்றமுள்ள தெய்வ சிந்தனையுடைய குடும்பப் பாங்கான மணமகள் தேவை. ஜாதகம் முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 617, C/o உதயன், யாழ்ப்பாணம்.
(29669)

## இலவச திருமணசேவை

31 வயது, பூராடம், செவ்வாய் 7, கி. பா. 101, நோர்வேயில் வேலை செய்பவருக்கு மணப்பெண் தேவை. Sponsor மூலம் அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி. (29674)

# பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், மார்ச். 1
யாழ். பல்கலைக் கழகத்தின் 3 ஆவது எம். பி. பி. எஸ். பரீட்சை - 1993 இல் 37 பேர் சித்தி அடைந்துள்ளனர்.

# ஜப்பானிய சங்க இலக்கிய நூல் அறிமுக விழா

ஜப்பானிய சங்க இலக்கியங்கள் பற்றிய இருநூல் அறிமுக விழா எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார். முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையும் —

ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரத்தின் [illegible] வெளியீட்டுரையும் கலாநிதி [illegible] ரைராசா (செங்கை ஆழியான்), பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் ஆகியோரது அறிமுக உரைகளும்—

வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்), கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோரின் மதிப்பீட்டுரையும்—

செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை, திரு. க. யோகநாதன் ஆகியோரின் குறிப்புரைகளும் இடம்பெறும்.
(இ-51)


விப்ஜியோர் அக்கடமி
(குளப்பிட்டி வீதி)
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

SPOKEN ENGLISH
BY
M. A. ஷரி
(B. A.; Dip-in Ed)

ஆரம்பம்:
01 – 03 – 1994
பிற்பகல் 4 மணி
(செவ்., வியா.
பிற்பகல் 5-6 மணி)
(29680)


# சித்த மருத்துவத்துறையின் 10 வருட வளர்ச்சியை வெளிப்படுத்திய கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையினர் ஏற்பாடு செய்திருந்த சித்த மருத்துவக் கண்காட்சி கைதடியில் உள்ள வளாகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் குடாநாட்டில் காணப்படும் நோய்கள், தொற்று நோய்கள் என்பவற்றுக்கு சித்த மருத்துவத்தின் மூலம் அளிக்கக்கூடிய இலகுவான சிகிச்சை முறைகளை மக்கள் தெளிவாக உணர்ந்து, அறிந்து கொள்ள அந்தக் கண்காட்சி பெரிதும் பயன்பட்டது என்று கூறலாம்.

கடந்த திங்கள் காலை ஆரம்பமான அந்தக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தொடக்கி வைத்தார்.

மூன்று நாட்கள் நடைபெற ஏற்பாடாகியிருந்த கண்காட்சி பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலரின் வேண்டுகோள்களை அடுத்து மேலும் இரண்டு நாட்கள் நீடிக்கப்பட்டது.

சித்த மருத்துவத்துறையின் கடந்த 10 ஆண்டு கால வளர்ச்சியின் மொத்த வெளிப்பாடாக அமைந்த அந்தக் கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கானவர்கள் பார்வையிட்டனர்.

குடாநாட்டில் காணப்படும் நோய்கள் பற்றி சித்த மருத்துவ ரீதியான விளக்கமும் — அதேவேளை மேலைத்தேய மருத்துவ ரீதியான விளக்கமும் ஒருங்கே அளிக்கப்பட்டது மிகவும் பயனுள்ள வகையில் அமைந்தது.

மலேரியா, அமீபா வயிற்றுளைவு, இரைப்பைப் புண், சுசரோகம், நீரிழிவு குடற்புழுக்கள், நெருப்புக்காய்ச்சல், சரும நோய்கள் போன்றவற்றுக்கான சித்த மருத்துவ சிகிச்சை மற்றும் நோய்ப் பாதுகாப்பு பற்றி விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. ஈரல், சுவாசப்பை, மார்புக்கட்டி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட உறுப்புக்களும் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியின் ஆரம்பத்தில் உடற்கூற்றியல் பிரிவில் மனிதனின் உடல் அமைப்பு உடற்கூறுகள் என்பன காணப்பட்டன. பாதுகாக்கப்பட்ட உடற் கூறுகளும் அதேவேளை அவற்றின் மாதிரி வடிவங்களும் வைக்கப்பட்டு அவற்றின் தொழிற்பாடு குறித்து விளக்கமளிக்கப்பட்டது. பல்வேறு விளக்கப் படங்களும் அங்கு இடம் பெற்றிருந்தன.

நிறை, உயரம், குருதி அமுக்கம், குருதியில் ஈமோகுளோபின் செறிவு என்பவற்றை அறிந்து கொள்ள வசதியாக அதற்கெனத் தனிப் பிரிவு ஒன்று அங்கு அமைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியை பார்வையிட வந்த பலர் தமது உடலில் மேற்படி பரிசோதனைகளை செய்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. கண்காட்சியில் மற்றுமோர் இடத்தில் நீரிழிவு பரிசோதனை செய்து கொள்ளவும் வசதி செய்யப்பட்டிருந்தது.

இயற்கையோடு இணைந்த — நல்வாழ்வை இலட்சியமாகக் கொண்ட சித்த மருத்துவத்தின் தனித்துவம் — வரலாற்றுப் பின்னணி என்பவற்றை விளக்கும் விளக்கப் படங்களும், குறிப்புகளும் மற்றொரு பகுதியில் இடம் பெற்றிருந்தன.

கண்காட்சிக்கு வந்திருந்த பெண்கள், தாய்மார் போன்றோரின் கவனத்தை பெரிதும் கவர்ந்த பகுதியாக 'மகப்பேறியல், மாதர் மருத்துவம், குழந்தை மருத்துவம்' அமைந்திருந்தது.

கர்ப்ப காலத்திலும், பிரசவ காலத்திலும் பெண்களுக்கு ஏற்படும் நோய்கள், தாய் சேய் நலன், குழந்தைகள் நோய்கள் தொடர்பான பல்வேறு விளக்கங்கள் அங்கு அளிக்கப்பட்டன.

பிரசவ முறைகளின் மாதிரி அமைப்புகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

### எய்ட்ஸ் நோய் எதிர்ப்பு

இன்று உலகை உலுக்கி வரும் நோய்களில் ஒன்றான "எய்ட்ஸ்" நோயினால் இழக்கப்படும் நோய் எதிர்ப்பு சக்தியை உடலுக்கு மீண்டும் வழங்கும் உள்ளூர் மூலிகைகள் கண்காட்சியில் பலரின் கவனத்தை கவர்ந்தன.

அமுக்கிரா செடி, வில்வம் இலை, தேற்றான் எனப்படும்

## இலநேசன்

மரத்தின் விதை என்பன எய்ட்ஸுக்கு எதிரான நோய் எதிர்ப்பு வலுவை உடலுக்கு வழங்கக் கூடியவை என மேலைத்தேய மற்றும் கீழைத்தேய மருத்துவ நிபுணர்களால் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டிருப்பதாக அங்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேற்படி மூன்று மூலிகைகளும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. வன்னி உட்பட தமிழீழப் பகுதிகளில் அவற்றைத்தாராளமாக பெற்றுக்கொள்ள முடியும்.

தேன் மெழுகில் இருந்து பெறப்படும் மெழுகை (Wax) உடலின் வெளிப் பூச்சு (Ointment) மருந்துகளுக்கான ஊடகமாகப் பயன்படுத்தும் முறை சித்த மருத்துவத்துறை மாணவர்களின் வெற்றிகரமான பரிசோதனையின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அந்த ஊடகத்தைப் பயன்படுத்தி படர் தாமரைக் களிம்பு, சித்த வலி நிவாரணி களிம்பு போன்றவை தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை சிறந்த வலி நிவாரணி[illegible]ாக விளங்குகின்றன.

### சாறிபா பானம்

இது சித்த மருத்துவ மூலிகைகள் பல சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த - சுவை மிகுந்த பானமாகும். சித்த மருத்துவத்துறை மாணவர்களின் தயாரிப்பான இது போன்ற பல பொருள்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

கனிச் சத்து நிறைந்த நீரிழிவு நோய்க்கு மருந்தாக பயன்படக்கூடிய குறிஞ்சி பிஸ்கட்—

தமிழீழத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கம்பு தானியத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கனிச்சத்து நிறைந்த யோகன் பிஸ்கட்—

அஜீரணத்தைப் போக்கி பசியை உண்டாக்கும் ஓமத்திநீர், ஓமப்பாணி—

4 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துமா

வேம்பு, சஞ்சீவி, புளி மஞ்சள் என்பனவற்றை சேர்த்து தயாரிக்கப்பட்ட சித்த தொற்று நீக்கி—

மலச்சிக்கலை தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட சுகபேதி மாத்திரை—

முரசு கரைதலை தடுக்கக் கூடிய வஜ்ரா பற்பொடி போன்ற சித்த மருத்துவத்துறை மாணவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பொருள்கள் பலவும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

தமிழீழத்தின் வளங்களில் இருந்து தயாரிக்கக் கூடிய மேற்படி பொருள்களை பெருமளவில் தயாரிக்கவோ— அல்லது அவற்றை மக்கள் மயப்படுத்தவோ, சந்தைப் படுத்தவோ மாணவர் என்ற முறையில் தங்களா[illegible] முடியாதிருப்பதாக [illegible] விளக்கமளித்த [illegible] துவ மாணவர் [illegible] வித்தார்.

[illegible] முன்வந்து இந்த சித்த மருந்துகளையும், உணவுகளையும் பெருமளவில் தயாரித்து சந்தைப்படுத்தும் பணி[illegible] செய்ய வேண்டும் எ[illegible] அவர் கூறினார்.

இதே போன்ற கருத்தை கண்காட்சியில் நாம் சந்தித்த சித்த மருத்துவ மாணவர்கள் பலரும் தெரிவித்தனர்.

★ தமிழீழத்தில் உள்ள சித்த மருத்துவ வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தல்.

★ தமிழீழ மற்றும் அந்நிய சித்த மருத்துவ வளங்களைப் பயன்படுத்தி புதிய கண்டுபிடிப்புகளைச் [illegible]செய்தல்.

★ தொழிற்சாலைகளை உருவாக்குதல், அதன் மூலம் வேலைவாய்ப்புக[illegible] ஏற்படுத்தல், அந்நிய [illegible] வணிகய மீதப்படு[illegible] பொருளாதார[illegible] கொடுத்தல்.

மேற்கூறிய மூன்று [illegible]களை அடிப்படையாகக் கொண்டு சித்த மருத்துவத் துறையின் வளர்ச்சிக்கு தாம் பங்காற்றுவதாக அங்கு விளக்கமளிக்கப்பட்டது.

18 காட்சிக் கூடங்களாக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியின் இறுதிப் பகுதியாக வீட்டுத் தோட்டம் ஒன்றின் மாதிரி அமைப்பு செய்யப்பட்டிருந்தது.

வீட்டுச் சூழலில் வளர்க்கக் கூடிய சித்த மருத்துவ மூலிகைகள், செடிகள் மற்றும் பயன்தரு மரங்கள் அந்த மாதிரி அமைப்பில் இடம் பெற்றிருந்தன.

அவ்வாறான வீட்டுத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கான ஆலோசனைகளும் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

★

## இன்று

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்கான [illegible]ம் இன்று பிற்பகல் [illegible] மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

பிரிவுபசார விழாவும், விருந்தும்

பேராசிரியர்

# அ. துரைராஜா

துணைவேந்தர்

பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் 1988 ஆம் ஆண்டு முதல் 1994 பங்குனி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றிய பின் திறந்த பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு அவருக்கு 1994 – 03 – 26 ஆம் திகதி மாலை 6 00 மணிக்குப் பிரிவுபசார விழாவும், இராப்போசன விருந்தும் நடத்துவதெனவும், பல்கலைக்கழகத்தின் சிறந்த மாணவருக்கான பரிசில்கள் வழங்குவதற்கான நிதியம் ஒன்றினை ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இதில் பங்குபற்ற விரும்பும் நலன்விரும்பிகள் யாழ் பல்கலைக்கழகப் பதிவாளருடன் 1994-03-18 பி. ப. 4.00 மணிக்கு முன் தொடர்பு கொண்டு ரூபா 250/- க்குக் குறையாது தங்கள் பங்களிப்பினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-02-28 (சி]7288)

மக்கள் நலன்காக்கும் பிரிவு

## அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

மக்கள் நலன் காக்கும் பிரிவின் கோப்பாய் பிரதேச முப்பது (30) பகுதிகளின் நிர்வாகக் குழுக்களுக்கான வருடாந்தத் தேர்தல் 03-06-94 முதல் 27-03-94 வரை இடம்பெற உள்ளது என்பதை அறியத்தருவதுடன் ஒவ்வொரு கிளைகளுக்குமான தேர்தல் கால அட்டவணையையும், மேலதிக விவரங்களையும் தலைமை அலுவலகத்தில் (ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரையுள்ள) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

தலைமையகம்,
மக்கள் நலன்காக்கும் பிரிவு
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.
(29682)

ஜேர்மன் சமஸ்டி குடியரசின்
நிதி உதவியுடன்

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி. ஆர். ஆர். ஓ)

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின்

அனுசரணையுடன்
இணைந்து நடத்தும்
ஆண், பெண் இருபாலாருக்குமான

## "விவசாய பயிற்சி நெறிகள்"

* பொது விவசாயம்
* ஒட்டுமுறை செய்கை
(பழமர விருத்தி)

ஆரம்பமாகின்றன

தகைமை:- க. பொ. த (சாதாரண தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்
காலம்:- 03 மாதங்கள்
சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் பயிற்சி நடைபெறும்
குறிப்பு:-
இடம்பெயர்ந்த 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 05 - 03 - 94 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்விச் சான்றிதழ், அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க் காணும் விலாசத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

ரி. ஆர். ஆர். ஓ. உபகாரியாலயம்
மானிப்பாய் வீதி,
உரும்பிராய்
(சி-7289)

யாழ். மறை மாவட்ட

## மேய்ப்புப் பணி மகாநாடு

**8-3-1994 - 14-3-1994**

எதிர்பாருங்கள்

**விளக்கக் கட்டுரைகள்**

சிறப்பிதழ்- 8-3-1994

பொது மக்கள் தொடர்புக் குழு
மேய்ப்புப்பணி மகாநாடு
(29689)

## மக்கள் நலன்காக்கும் பிரிவின் ஆரம்பகால உறுப்பினர்களுக்கான அறிவித்தல்

மக்கள் நலன் காக்கும் பிரிவின் 1994ஆம் ஆண்டுக்குரிய தலைமைச்சபையின் பொதுச்சபை உறுப்பினர்களாக இணைந்து கொள்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31-03-1994 ஆகும் என்பதனை இத்தால் நினைவூட்டுகின்றோம்.

மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் (ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9-00 மணிமுதல் மாலை 5-00மணி வரையுள்ள) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

தலைமையகம்,
மக்கள் நலன்காக்கும் பிரிவு.
இருபாலைச் சந்தி,
கோப்பாய்
(29681)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 06-02-1983
மறைவு: 30-01-1994

புங்குடுதீவைச் சேர்ந்த

### செல்வன் திருநாவுக்கரசு கார்த்திக்

(மாணவன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்தில்
கள்ளமில்லா உன் வெள்ளை உள்ளத்தை
கொள்ளை கொண்ட காலனவனின்
மாயம்தான் என்னவோ என ஏங்குகிறோம்.
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்

அதிபர், ஆசிரியர்கள்.
யாழ். புங்குடுதீவு ஸ்ரீ பராசக்தி வித்தியாலயம்.
[illegible] வித்தியாலயம்.
(சி/7292)

## லிகிதர் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள ஒரு வியாபார நிலையத்திற்கு ஆங்கில தட்டச்சு கணக்குப் பதிவு முதலியவற்றில் நல்ல அனுபவமுள்ள, ஆர்வமுடைய பெண் லிகிதர் தேவை. உடனே சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
இல, 25.
மே/பா உதயன் சேவை நிலையம்
82, கே-கே-எஸ்- வீதி,
சுன்னாகம். (7021)

வண், கிழக்கு கலட்டி, எச்சாட்டி

## மஹாமாரியம்மன் தேவஸ்தானம் துர்க்காதேவி சாந்திக அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

# பூங்காவனத் திருவிழா 01–03–1994

மேற்படி திருவிழா கோலாகலமாக கொண்டாடப் படவுள்ளது. அம்பாள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதியுலா வந்து 7. 30 மணிக்கு ஆலயத்தை அடைந்ததும் பின்வரும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

நிகழ்ச்சி நிரல்

மாலை 6. 00 மணிக்கு

மேளக்கச்சேரிகள்

இணுவில் காலஞ்சென்ற மேதை N.R. சின்னராசாவின் புதல்வர்கள் குழுவினர்

நாதஸ்வர கலாநிதி N.K. பத்மநாதன் குழுவினர்

விசேட நிகழ்ச்சிகள்

| தவில் | நாதஸ்வரம் |
|---|---|
| T. உதயசங்கர் | N.K. பத்மநாதன் |
| K. சிவகுமார் | S.S. சிதம்பரநாதன் |
| N.R.S. ரவீந்திரன் | A. முருகானந்தன் |
| N.R.S. சுதாகரன் | N.R. சந்தானகிருஷ்ணன் |

10 00 மணிக்கு

## இன்னிசை கானமழை ஈழநல்லூர் அருணா குழுவினர்

ஒளி அமைப்பு
மனோ லைட், கோப்பாய்

ஒலி அமைப்பு
கண்ணா சவுண்ட், திருநெல்வேலி

அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பாளின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
திருவிழா உபயகாரர்.
([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பேரம் பேச முடியாதது!

பாரம்பரிய தாயகம் என்பதை, எந்தச் சந்தர்ப்பத்திலும் கோட்பாடு ரீதியாக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கவில்லை. இந்த நாட்டில் எந்தப் பிரதேசத்திலும், எவரும் இன வேறுபாடின்றி வாழலாம் என்பதே எமது அடிப்படைக் கருத்து.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருக்கிறார்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனிடமிருந்து புலிகளின் நிலைப்பாடு தெளிவாக வெளிப்படும் நிலையில், முன்நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலைக்கூடத் தோன்றலாம் என்றும் பிரதமர் கோடிட்டுக் காட்டி உள்ளார்.

தமிழர் சார்பில் புலிகள் போராடுவது தமிழர்களுக்கென ஓர் அரசையும் ஒரு நாட்டையும் அமைப்பதற்காகவே என்பது எல்லோருக்குமே தெரிந்த ஒன்று.

எனினும் தமிழீழம் என்ற கோரிக்கைக்கு மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்தால் அதனைத் தாம் பரிசிலனை செய்வதற்குத் தயார் என்ற தமது நிலைப்பாட்டை கடந்த வருடம் மார்ச் மாதம் இரண்டாம் திகதி பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் தலைவர் பிரபாகரன் மிகத் தெளிவாகக் கூறிவிட்டார். இதனை அகில உலகமுமே தெரிந்து கொண்டது.

ஆனால் கொழும்பு அரசாங்கம் தலைவர் பிரபாகரனின் அந்தச் செய்தியை, சமிக்ஞையை, நிலைப்பாட்டை உரிய விதத்தில் பொருட்படுத்தவில்லை. உகந்த நேரத்தை, நல்ல தருணத்தை தக்கபடி பயன்படுத்தவில்லை.

இப்போது, சமாதானத்தில் — பேச்சுவார்த்தையில் — அரசுக்கு நாட்டம் இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் வேளையில், அதற்கு ஆரம்பத்திலேயே முட்டுக்கட்டை போடும் விதத்தில் தமிழரின் பாரம்பரிய தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரதமர் கூறுகிறார்.

தமிழர் தாயகம் என்ற கோட்பாடு தான் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கான மூலக்கரு. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்தே அதனை முன்னிறுத்தியே தமிழர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அதனை மறந்த நிலையில் சிங்களத் தலைவர்கள் பேசுவது, தமிழர்கள் சுதந்திரக் காற்றை அனுபவித்து வாழ்வதை அவர்கள் விரும்பவில்லை என்பதையே நிரூபிக்கிறது.

1985ஆம் ஆண்டில் இடம்பெற்ற திம்பு மாநாட்டில் ஜெயவர்த்தனா அரசு தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்க மறுத்தமையே, அதன் பின்னர் விளைந்த வினைகளுக்கெல்லாம் வித்து என்பதை ரணில் வேண்டுமென்றே மறந்து போனது ஏனோ?

வானம் முழுவதிலும் மனமகிழ்ச்சியுடன் சிறகடித்துப் பறந்து திரியும் சிட்டுக்குருவி கூட, தனக்கென ஒரு தாயகத்தைக் கொண்டிருக்கிறது. ஆம், அதுதான் அந்தக் குருவியின் கூடு.

அப்படியிருக்க, தமிழர்கள் தமது மூதாதையர்கள் வாழ்ந்த மண்ணை, தமது சொந்தமண்ணை தாயகமாகக் கொள்ள உரிமையில்லை என்றால் அதற்குப் பெயர் சுதந்திர வாழ்வா? தமிழர்கள் தமது தாயகத்தை உறுதிப்படுத்திக் கொள்ளாவிடில் அவர்கள் தங்களது தனித்துவத்தையும், இனத்துவத்தையும் பாதுகாப்பது எப்படி? அவர்களின் தாயகக் கோட்பாடு பேரம் பேசமுடியாதது.

தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்க முடியாது என்று சிங்களவர் கூறுவதனை தமிழர்களையும் சிங்களவராக்கும் சதி என்றே கொள்ளவேண்டும்.

தமிழர் தாயகக்கோட்பாட்டை ஏற்க முடியாது என்று கூறும் பிரதமரும், ஏனையோரும் சிங்களவர்களும் ஸ்ரீலங்கா தமது தாய்நாடு என்ற கோட்பாட்டைக் கைவிடுவார்களா?

காஸா - மேற்குக் கரை

# பலஸ்தீனருக்கு அமெரிக்கா பாதுகாப்பு வழங்க வேண்டும்

## அரபாத் கோருகிறார்

கெய்ரோ, மார்ச் 1

கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் மேற்கு கரைப் பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்களுக்கு பாதுகாப்பு வழங்க அமெரிக்கா முன்வர வேண்டும்.

இப்படி பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையில் — வாஷிங்டனில் நடைபெற்று வரும் மத்திய கிழக்கு] சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து லெபனான், ஜோர்தான் மற்றும் சிரியா ஆகிய நாடுகள் வெளியேறிவிட்டன.

ஹெப்றோன் படுகொலையின் பின்னணியில் இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளில் தாம் தொடர்ந்து கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

இதே வேளை — கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள யூதர்களில் தீவிரவாதிகள் என்று கருதப்படுபவர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையப் போவதாக இஸ்ரேலிய அரசு அறிவித்துள்ளது.

பெரும்பாலும் 20 வரையிலான யூத தீவிரவாதிகளிடம் இருந்தே ஆயுதங்களைக் களைய இஸ்ரேல் தீர்மானித்திருப்பதாக பி.பி.ஸி. அறிவித்திருக்கிறது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை, பலஸ்தீனியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யப் போதுமானதாக இல்லை என்று யாஸிர் அரபாத் தெரிவித்தார்.

மேற்குக் கரையின் ஹெப்றோன் நகர பள்ளி வாசல் ஒன்றில் யூதர் ஒருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 50க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-எ)

## உலகில் நீண்டகாலம் வாழ்ந்து வரும் பெண்

பாரிஸ், மார்ச் 1

இரண்டு உலக மகாயுத்தங்கள், பதினேழு பிரெஞ்சு ஜனாதிபதிகள் மற்றும் சோவியத் கம்யூனிஸத்தின் பிறப்பையும் இறப்பையும் கண்ட பிரெஞ்சுப் பெண் ஒருவரே, உலகில் நீண்ட காலம் வாழ்ந்து வரும் பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில், உலகில் நீண்ட காலம் வாழ்ந்து வரும் ஒரே பெண் என்ற இடத்தைப் பெற்றுள்ள ஜீன் கல்மென்ற் என்ற இந்தப் பெண் கடந்த திங்கள் தமது 119 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

21-02-1875 இல் பிறந்த இவரின் தற்போதைய எடை 45 கிலோ கிராம்கள்.

1990 இல் அவரது இடுப்பில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து அவர் சக்கர நாற்காலியில் இருந்து கொண்டே நடமாடுகிறார். (த-எ)

சமூக விரோதச் செயல்களைத் தடுக்க

## பௌத்த பிக்குமாருக்கு விசேட அடையாளக் கார்ட்

கொழும்பு, மார்ச் 1

பௌத்தபிக்குகள் அனைவருக்கும் விசேட அடையாளக் கார்ட்டுகளை வழங்க பௌத்த சாசன அமைச்சு முடிவுசெய்துள்ளது.

ஒவ்வொரு பௌத்தபிக்குவும் பௌத்த விவகார திணைக்களத்தில் தம்மைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்று பௌத்த சாசன அமைச்சு கேட்டுள்ளது.

பிக்கு அடையாளக் கார்ட்டுகளை சட்டரீதியானதாக்க பௌத்த சாசனத் திணைக்களம் சட்டத்திருத்தம் ஒன்றைக் கொண்டு வரவிருப்பதாக பௌத்த சாசன ஆணையாளர் எஸ். காரியவாசம் கூறினார்.

பிக்குகள் என்ற போர்வையில் சமூக விரோதச்சக்திகள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்குமுகமாகவே பிக்குகளுக்கு விசேட அடையாளக் கார்ட் வழங்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஒ-எ)

## ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை

யாழ்ப்பாணம், மார்ச் 1

நிதர்சனம் தயாரித்து வழங்கும் மாதாந்த வெளியீடான ''ஒளிவீச்சு ஜனவரி 1994'' வீடியோ சஞ்சிகை நாளை புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படும்.

மாலை 6-00 மணிக்கு அகன்ற திரையில் இதனைக் காண்பிக்க ஏற்பாடாகி உள்ளது.

இந்த வீடியோ சஞ்சிகை தளபதி கேணல் கிட்டுவின் நினைவாக சிறப்பு வெளியீடாக வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# மடு அகதி முகாம் பராமரிப்பு வேலை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

''மடு அகதிமுகாம் பராமரிப்பு மற்றும் வடமாகாணத்தில் சுயபொருளாதார திட்டம் ஆகிய பணிகளை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கடந்த 20 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது''

யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக கொழும்பு அலுவலக அதிகாரி திரு. டேவிட் அட்றின் இதனைத் தெரிவித்தார்.

தமது பணிகள் குறித்து அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

மடு மற்றும் பாலம்பிட்டி அகதிமுகாம்களில் உள்ள அகதிகளின் இருப்பிட, சுகாதார, குடிதண்ணீர் பிரச்சினைகள் பற்றிய விடயங்களையே எமது அமைப்பு இனி மேற்கொள்ளும்;

அகதிகளுக்கான உணவுப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்துவரும் பணியை அரச அதிபரே இனி மேற்கொள்வார்.

உணவுப் பொருள்கள் வாகனங்களில் எடுத்து வருவதற்கு எமது அமைப்பு பொறுப்பாக இருக்கமாட்டாது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் எமது அமைப்பு சுயபொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

இத்திட்டம் இந்தியாவில் இருந்து திரும்பும் அகதிகளுக்கு மட்டுமல்ல ஏனைய மக்களுக்கும் செயற்படுத்தப் படும் — என்றார். (இ-8)

## இங்கிலாந்து நிறுவனம் அன்பளிப்பு

வல்வெட்டித்துறை, மார்ச் 1

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இங்கிலாந்து கோட்ஸ் நிறுவனம் அன்பளிப்பாக வழங்கி 35ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கடந்த 22ஆம் திகதி கையளிக்கப்பட்டன.

இப்பொருள்களை ஆதிகோவிலடி சிக்கனக் கடனுதவிச் சங்கம் பொறுப்பேற்றது. (க-155)

கொழும்பில் இட நெருக்கடி:

# காலித் துறைமுகத்திலும் இனிவெளிநாட்டு கப்பல்கள்!

கொழும்பு, மார்ச் 1

வெளிநாடுகளில் இருந்து பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கு கொழும்பு துறைமுகத்தில் ஏற்படும் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக காலித் துறைமுகமும் பயன்படுத்தப்படவிருக்கிறது.

சீனாவில் இருந்து ஐயாயிரத்து 90 தொன் உரத்தை ஏற்றிவரும் கப்பல் இன்று காலித் துறைமுகத்தைப் போய்ச்சேரும்.

மார்ச் மாதத்துக்கும் மே மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பு துறைமுகத்தில் இட நெருக்கடி ஏற்படுவது வழக்கம் என்றும் —

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் உணவு, உரம் ஆகியவற்றை ஏற்றிவரும் சில கப்பல்கள் காலித்துறைமுகத்துக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் — துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சர் அதுவிகாரை தெரிவித்துள்ளார். (ஒ-3)

## சைவ சிறுவர் இல்ல கொடி வாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கைதடி சைவச்சிறுவர் இல்லத்துக்காக இந்து சமயப் பேரவை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் கொடி வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்து வருகிறது.

கடந்தவருடம் ஒருநாள் அனுஷ்டிக்கப்பட்ட கொடி தினம் இம் முறை 10 ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை ஒருவாரம் அனுஷ்டிக்கப்படும் என்று இந்துசமயப் பேரவை அறிவித்துள்ளது. (ஒ-8)

# சிவராத்திரி விழாவை ஒட்டி பேச்சுப் போட்டி ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச். 1

மகா சிவராத்திரியை முன்னிட்டு வலி தெற்கு பிரதேச செயலர் பிரிவில் பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டி ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

இந்து சமயப் பேரவை மருதனார்மடம் கல்விக் கோட்டத்தின் உதவியுடன் இப் போட்டியை நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என 4 பிரிவுகளாக நடத்தப்படும்.

வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு சிவராத்திரி தினமான எதிர்வரும் 10ஆம் திகதி [illegible] பெறும். (ஒ-3)

## நகரை நோக்கி ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச். 1

யாழ். ஆனைக்கோட்டை [illegible] வலயத்தின் மேலாகக் கூவிக் கொண்டு சென்ற ஷெல் யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் வீடொன்றின் மேல் விழுந்து வெடித்ததில் வீடு சேதமடைந்தது.

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை சுமார் 6.30 மணிக்கு ஏவப்பட்ட ஷெல்லே நீராவியடியில் வீழ்ந்தது.

வீட்டில் ஷெல் விழுந்த அறைக்கு அடுத்த அறையில் வீட்டுக்காரர்கள் இருந்ததால் [illegible] கொண்டனர். (உ-15-9)

# கிராமத்திற்குள் யானைகள் புகுந்து அட்டகாசம்

## கிழக்கில் 6 தமிழர்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உவர்காமம் இராமகிருஷ்ண குடியிருப்புப் பகுதியில் காட்டு யானைகள் தாக்கியதில் ஒரு குழந்தை உட்பட ஆறு தமிழர்கள் கொல்லப்பட்டனர். இருபது வீடுகள் தாக்கி சேதமாக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை 50க்கு மேற்பட்ட காட்டு யானைகள் கிராமத்துள் நுழைந்து அட்டகாசம் புரிந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட காட்டு யானைகள் கூட்டமாக கிராமத்திற்குள் புகுந்து அட்டகாசம் புரியத் தொடங்கின.

ஏற்கனவே இப்பகுதியில் யானைகளின் அட்டகாசம் இருந்ததால், அங்குள்ளவர்களில் அநேகர் இரவில் வேறு இடங்களுக்குச் சென்று தங்கி வந்தனர்.

இல்லாவிடில், உயிரிழப்பு இன்னும் பெரியளவில் இருந்திருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டது.

யானைகள் ஏற்படுத்திய அழிவினால் கால்நடைகள் பலவும் கொல்லப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-8)

## பதுங்கு குழிகள் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 1

யாழ். நகரில் பிரதான இடங்களில் மீண்டும் பதுங்கு குழிகள் வெட்டப்பட்டு வருகின்றன.

தற்பாதுகாப்புக் கருதி மக்கள் உடனடியாக பதுங்குகுழிகளை வெட்டிக் கொள்ளுமாறு பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (ஒ-17)

## மாதர் சங்கம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கொழும்புத்துறை மேற்கு மாதர் அபிவிருத்திச் சங்கம் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஒ-17)

ஜனாதிபதியும் தீர்வை ஆதரிக்கிறார்?

# விரைவில் சமாதானம் ஏற்படுமென திடமாக நம்புகிறேன்

## ஆரியரத்ன சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 1

யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய சர்வோதயத் தலைவர் டாக்டர் ஆரியரத்னா, ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்து குடாநாட்டின் பிந்திய நிலைவரத்தை விவரித்துக் கூறியிருந்தார் அல்லவா!

அச் சந்திப்புக் குறித்து சண்டே ரைம்ஸ் ஆங்கில வார இதழ் மேலும் சில தகவல்களை வெளியிட்டது.

அச்சந்திப்பின் போது, விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த கரிகாலனின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாவை ஆரியரத்னா ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார் என்பதும் தெரிந்ததே.

''நான் கூறியவற்றை ஜனாதிபதி அனுதாபத்துடன் கேட்டார். மிகவிரைவில் சமாதானம் ஏற்படும் என்று நான் திடமாக நம்புகின்றேன்'' — என்று ஆரியரத்னா பின்னர் தெரிவித்தார்.

ஆரியரத்னாவுடனான சந்திப்பின் போது — தாம் தீர்வு ஒன்று வருவதை ஆதரிப்பதாக ஜனாதிபதி கூறினார் என்றும் —

உத்தேச பேச்சுவார்த்தைக்கான வழி முறைகள் குறித்தே அவர் கேள்வி எழுப்பியதாகவும் —

யாருடன் பேச்சுவார்த்தையை நடத்துவது, எப்போது நடத்துவது என்ற கேள்விகளையே ஜனாதிபதி அப்போது எழுப்பினார் என்றும் தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

பின்னர் டாக்டர் ஆரியரத்னா, சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா, நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, சுதந்திரக் கட்சி எம். பி. நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். சபாநாயகர் முஹம்மது, உபசபாநாயகர் காமினி பொன்சேகா ஆகியோரையும் அவர் சந்தித்தார்.

அனைவரும் பொதுவாக சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான அனைத்தையும் மேற்கொள்ளும்படி தம்மைக் கேட்டுக் கொண்டதாகவும் ஆரியரத்னா தெரிவித்தார்.

''சமாதானமாக வாழ நாம் விரும்புகின்றோம்'' — என்றே பல எதிரணி அரசியல்வாதிகள் தம்மிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டால் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தராக செயல்படத் தாம் விரும்புவதாகவும் அவர் கூறினார். விரைவில் தாம் மீண்டும் யாழ் செல்லவிருப்பதாகவும் அவர் கூறினார். (ஒ-எ)

# மேட்டுநிலப் பயிர்ச்செய்கை: ம.எண்ணெய் வழங்கப்படும்

தென்மராட்சி, மார்ச், 1

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு, பளை விவசாய சேவை நிலையத்தினர் இரு வாரங்களுக்கு பத்து லீற்றர் மண்எண்ணெய் வீதம் நான்கு தடவைகள் வழங்கவுள்ளனர்.

அத்துடன் காய்க்கும் பயிர்களுக்கென டி. ரி. எம். உரத்தையும் கட்டுப்பாட்டு விலையில் வழங்கி வருகின்றனர்.

இதேவேளை நெற் செய்கையாளர்களுக்கு சூடடிப்பதற்கென ஐந்து லீற்றர் மண்எண்ணெய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

# பேராசிரியர் துரைராசாவின் சேவைக்குப் பாராட்டு

ஸ்ரீலங்காவிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் பல்வேறு காரணங்களுக்காக அடிக்கடி மூடப்பட்டபோதும் கடந்த ஆறு ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழகம் ஒரு போதும் மூடப்படாது திறம்பட இயங்கிவந்துள்ளது. இந்திய - ஸ்ரீலங்கா இராணுவக் கெடுபிடி காலத்தில் கூட இப் பல்கலைக்கழகம் மூடப்படவில்லை. இதற்கான பெருமை பேராசிரியர் துரைராசாவின் திறமையைச் சாரும்.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற பேராசிரியர் துரைராசாவின் சேவை நலன் பாராட்டு விழாவில் உரை நிகழ்த்திய யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலால இவ்வாறு கூறினார்.

''பேராசிரியர் துரைராசா மிகச் சிறந்த பல்கலைக்கழக நிர்வாகி மட்டும் அல்ல; தேசாபிமானியும் ஆவார். எமது பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக, குறிப்பாக எமது வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக பேராசிரியர் ஆற்றியுள்ள திட்டரீதியான உரைகளை நூல் வடிவில் வெளியிட வேண்டும்.''

விழாவில் துணைவேந்தர் துரைராசாவின் பணிகளைப் பாராட்டி இன்னும் பலரும் உரையாற்றினார்கள்.

விழா இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-155)

## தமிழ்த்துறை ஆய்வரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தமிழ்த்துறை ஆய்வரங்குத் தொடரில் இந்த ஆண்டின் மூன்றாவது நிகழ்ச்சியாக நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ''அழகியல் நோக்கில் மாணிக்கவாசகர்'' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழும்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு க. இரகுபரன் ஆய்வுரையை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபம் இல 1 இல் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் ஆய்வரங்கு நடைபெறும். (இ)

# தர்மத்தின் பக்கம் நிற்பது எழுத்தாளர் கடமையாகும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 1

தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையில் நடைபெறும் போரில் தர்மத்தின் கரத்தை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு எமது எழுத்தாளர்களுக்கு உண்டு.

சாந்தனின் ''காலங்கள்'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கலைமன்றத்தின் ஆதரவில் கைலாசபதி கலையரங்கில் விழா அண்மையில் நடைபெற்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை தொடர்ந்து பேசுகை யில் —

எழுத்தாளர் சாந்தன் தர்மத்தின் பக்கமே தம்மை எப்போதும் இனங்காட்டி வந்துள்ளார். எமது பிரச்சினைகளை இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இனங்கண்டு அவர் எழுதிவருகின்றார் — என்றார்.

கலாநிதி நா. சுப்பிரமணியன், கவிஞர் சோ. பத்மநாதன், செல்வி ப. நாமகள், திரு. டானியல் அன்ரனி ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

மூத்தஎழுத்தாளர் 'வரதர்' முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். [க]

## நரோமாவில் செல்லும் பயணிகளுக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 1

'நரோமா' கப்பல் மூலம் காங்கேசன் துறையில் இருந்து திருமலை செல்வதற்காக பெயர்களைப் பதிவு செய்துள்ள பயணிகளை இன்று முற்பகல் 9 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இந்தப் பயணிகளை பருத்தித்துறையில் இருந்து இன்று முற்பகல் 11 30 மணிக்கு 'கோமாரி' கப்பல் மூலம் காங்கேசன் துறைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-5)

**கனிவளம் பெருக்கி பிணி தனை குறைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு தடங்கலுக்கு வருந்துகிறோம்.

**அறிவுக் களஞ்சியம் - 21**

05 - 03 - 1994 இல் வெளிவரும்.

(இ/7427)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலாம்பிகைஅம்மாள் சோமசுந்தரம்

(காரைநகர்)

திருமதி பாலாம்பிகை அம்மாள் சோமசுந்தரம் 13-02-1994இல் ஜேர்மனியில் சிவபதமடைந்து விட்டார்.

இவர் இலங்கைக் கட்டடத் திணைக்கள ஓய்வு பெற்ற பொறியியலாளர் சோமசுந்தரத்தின் (கனடா) அன்பு மனைவியும், இலகடி காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தப்பர் இராமப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், களபூமி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வே. முத்தையா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலமோகன் (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), ஜெயந்தினி (ஜேர்மனி), சுரேந்திரன் (கனடா), ஆகியோரின் தாயாரும், குமாராணி, இவநேசன், பாலகிருஷ்ணன், ஜெயலட்சுமி ஆகியோரின் மாமியாரும், கிருஷாந்தன், சரவணன், கபிலன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற ஞானகிஅம்மாள் வேலுப்பிள்ளை, பாலகிருஷ்ணன் (கனடா), சிவாம்பிகைஅம்மாள் இராமச்சந்திரன், தர்மலிங்கம் (தொழில் உத்தியோகத்தர் மாவட்டத் தொழில் அலுவலகம், யாழ்ப்பாணம்), அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
இ. அமிர்தலிங்கம் (தம்பி)

24/1 புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (29684)

## தில்லையம்பலம் வைத்திலிங்கம்

(ஆசாரியார்)

காரைநகர், களபூமி, காவிகோயிலடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் வண்ணார் பண்ணையில் வசித்து வந்தவரும் ஆகிய தில்லையம்பலம் வைத்திலிங்கம் (ஆசாரியார்) 28-2-94 (திங்கள்) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், குமாரசாமி, பரமேஸ்வரி, சிவக்கொழுந்து, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 1-3-94 (செவ்வாய்) பிற்பகல் 1.00 மணியளவில் வண்ணார் பண்ணை, நாவலடி வீதி, இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
குமாரசாமி
சுப்பிரமணியம்
(மக்கள்)

வண்ணார் பண்ணை,
நாவலடி,
பேச்சி அம்பாள் கோவிலடி. (29691)

## திருமதி அன்னம்மா கார்த்திகேசு

கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்னம்மா கார்த்திகேசு 28-02-94 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவகாமி தம்பதிகளின் அன்பு மகளும் கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், சந்திரசேகரம் (சிம்பாவே), கனகாம்பிகை (சிம்பாவே) ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராசா (சிம்பாவே), இராசேஸ்வரி (சிம்பாவே) ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr. குமரேசன் (லண்டன்), கும்பேசன் (பொறியியலாளர் கனடா), கேசவன் (கணக்காளர் சிங்கப்பூர்), தவநேசன், சரவீசன், பரேசன், பாமதி, தாட்சாயணி, நளாயினி, சிவகாமி ஆகியோரின் பேர்த்தியும் வைரவியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோயிலாக் கண்டியிலுள்ள அவரது மிதலை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று செவ்வாய்க்கிழமை (1-3-94) நண்பகல் 12 மணிக்குத் தவிப்பனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. கார்த்திகேசு
(கணவன்)
வே. சிவசுப்பிரமணியம்
(பெறாமகன்)

கோயிலாக்கண்டி,
சைதடி (29691)

## ஞானசேகரப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சண்டிலிப்பாயில் (சீரணிச் சந்தியில்) வசித்தவருமான ஆயுள்வேத வைத்திய கலாநிதி ஞானசேகரப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 28-02-1994 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஞானப்புவின் அன்புக் கணவரும் செல்வராஜா, (ஆயுள்வேத வைத்தியர் ஞானவைத்தியசாலை சண்டிலிப்பாய்), பெனடிற் ஜெயராஜா (வெளி), விக்ரம் இம்மனுவேல் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராணி (முன்னாள் ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி தலைவாக்கலை), கனகசுந்தரி, ரதி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அ. போ. செல்வராசா

சீரணிச் சந்தி,
டச் றோட். (29692)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01-03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கொள்கலனில் ஒளித்துப் பயணம் செய்து
# ஜேர்மன் செல்ல முயன்ற 125 தமிழர்
# உடுத்த உடையுடன் கொழும்பு திரும்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

ஜேர்மனி செல்வதற்கென கொழும்பிலிருந்து சென்ற 125 தமிழர்கள், ருமேனியாவில் இருந்து ஹங்கேரிக்கு கொள்கலன் ஒன்றில் மறைந்திருந்து பயணம் செய்தபோது பிடிபட்டு கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கொழும்பிலிருந்து புறப்பட்ட பத்து நாட்களிலேயே அவர்கள் தமது கடவுச்சீட்டு மற்றும் உடைமைகளைப் பறிகொடுத்து உடுத்த உடையுடன் (கடந்த 18 ஆம் திகதி) கொழும்பு வந்து சேர்ந்தனர்.

கொழும்பு திரும்பியவர்களில் சிலர் சுகவீனம் காரணமாக கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது பற்றி அறியவருவதாவது:-

ஜேர்மனி செல்வதற்கென இந்த 125 பேரையும் வெளிநாட்டு முகவர் ஒருவர் ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்றார். ரஷ்யாவிலிருந்து அவர்கள் ருமேனியா சென்றடைந்தனர்.

அங்கிருந்து வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்ட கொள்கலனுக்குள் மறைந்திருந்து ஹங்கேரி செல்ல முயன்றனர்.

துரதிர்ஷ்டவசமாக கொள்கலன் ஏற்றப்பட்ட வாகனத்துடன் கார் ஒன்று மோதியது. அந்த விபத்துக் குறித்து விசாரிக்க வந்த ஹங்கேரிப் பொலிஸார் கொள்கலனைத் திறந்து பார்த்தனர். 125 தமிழர்களும் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

விசாரணையின் பின்னர், கடவுச்சீட்டு மற்றும் உடைமைகளை பறிமுதல் செய்த ஹங்கேரி குடிவரவு - குடியகல்வு பகுதியினர் 125 பேரையும் கொழும்புக்குத் திருப்பி அனுப்பினர்.

உடுத்த உடையுடனேயே கட்டுநாயக்கா வந்து சேர்ந்த 125 பேரையும் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் நோயுற்ற சிலர் சுகவீனம் காரணமாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-162)

## அரச ஊழியர் தொகை மதிப்பீடு

தென்மராட்சி, மார்ச் 1

அரச மற்றும் பொதுத்துறை ஊழியர்களின் தொகை பற்றிய விவரங்கள் இன்று முதல் திரட்டப்பட உள்ளன.

மத்திய அரசிலுள்ள அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் அரச தனியார் துறை கம்பனிகள் ஆகியவற்றின் ஊழியர்களும், மாகாண சபையிலுள்ள அமைச்சுக்கள் திணைக்களங்கள் உள்ளூராட்சிப் பகுதி ஊழியர்களும் தத்தமது விபரங்களை படிவம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தொகை மதிப்பு புள்ளி விவர திணைக்களத் தலைவர் சகல நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளார். (த-117-178)

## பாடசாலைகளில்

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி வி. மகபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். (க-90)

★ ★ ★

நீர்வேலி இ. க. தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. குணலிங்கம் தலைமையில் நடைபெறும். (த)

## ரணிலின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகரசபைமண்டபம் அமைந்துள்ள பகுதியூடான போக்குவரத்துக்குப் படையினர் தடை விதித்திருந்தனர் என்றும் —

பிரதமர் புறப்பட்டுச் சென்றதும் போக்குவரத்துக்கான தடை நீக்கப்பட்டது என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பேச்சுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதியும் உலக நோக்க சர்வதேச நவுண்டேஷனின் செயலாளர் நாயகருமான திரு. ஆர்னேஜோரொப்ட் என்பவருக்கு நோர்வே வெளியுறவு அமைச்சு 'பச்சை விளக்கு' காட்டியிருக்கிறது.

### தொடர்பு ஆள்

நோர்வே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு கொழும்பில் இருந்து அளித்த நேரடிப் பேட்டி ஒன்றில்—

இலங்கை அரசுக்கும் சண்டையிடும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே 'தொடர்பு ஆளாக' செயல்படுவதற்கு நோர்வே வெளியுறவு அமைச்சின் ஆதரவு தமக்குக் கிடைத்திருப்பதாக திரு. ஜோரொப்ட் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கி வரும் பிரதான நாடுகளில் ஒன்றான நோர்வே, 1990 ஆம் ஆண்டில் இருந்து இனப் பிரச்சினையில் இருதரப்புக்கும் இடையேயான முட்டுக்கட்டையை அகற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வந்தது.

தற்போதைய பிந்திய நிலைவரம் எழும்வரை, நோர்வேயின் முந்திய முயற்சிக்குபாதகமான முறையிலே இருதரப்பினரின் நிலைப்பாடும்இருந்து வந்தது.

### புலிகளின் பதில்

"இலங்கை அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு இப்போது தமது விருப்பத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் கோடிகாட்டியுள்ளது. அடுத்த சில தினங்களில் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்றை விடுதலைப்புலிகள் வெளியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இருதரப்பினருக்கும் இடையில் 'தொடர்பு ஆளாகவே' எந்த நேரமும் எனது பங்கு இருந்து வருகிறது"— இப்படி திரு. ஜோரொப்ட் நோர்வே வானொலிப் பேட்டியில் தெரிவித்தார்.

"யுத்த முனைக்கு பல தடவைகள் சென்று வந்திருக்கின்றேன். விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேசிவேன். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேசியிருந்தேன். இப்போது இது தொடர்பாக அரசாங்க உறுப்பினர்களுடனும்பேசியிருக்கின்றேன். தனி நாடு, தனித்தேசம் என்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள் வற்புறுத்துயார்களானால் முழு நடைமுறைக்கும் அது முட்டுக்கட்டையாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்; சமாதானப் பேச்சுவார்த்தை நடைமுறையில் அவர்களுக்கு இடமளிப்பது அரசாங்கத்துக்கு மீண்டும் ஒரு தடவை கஷ்டமான காரியமாகவும் இருக்கும் —இப்படி திரு ஜோரொப்ட் மேலும் தெரிவித்தார்.

### நம்பிக்கை உண்டாம்

கொழும்பிலுள்ள அரசசார்பற்ற அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து திரும்பிய திரு ஜோரொப்டை ஐலண்ட் செய்தியாயர் சிசிர விஜேசிங்கா தொடர்பு கொண்டு கேட்டபோது—

இந்த ஆண்டில் இலங்கையில் சமாதானம் வர வாய்ப்பு ஏற்படும் என்பது குறித்து தாம் மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாகதிரு.ஜோரொப்ட் தெரிவித்தார்.

"இலங்கையர்கள் பொதுவாக சமாதான விரும்பிகள். இலங்கைக்கு சமாதானம் தேவைப்படுகிறது

"இருதரப்பினருக்கும் இடையே நான் தொடர்பு ஆளாக பணி புரிந்தாலும், பேச்சுவார்த்தையில் நான் சம்பந்தப்படாமல் இருக்கலாம். இம்முறை எமகள் சமாதான முயற்சி குறித்து மிகவும் நம்பிக்கையாகவுள்ளேன்" என்றும் திரு. ஜோரொப்ட் தெரிவித்தார். (உ-எ-3)

## தபால்களை இன்று சேர்க்கவும்

யாழ்ப்பாணம், மார்ச். 1

ஓரிரு தினங்களில் பருத்தித்துறையில் இருந்து கொழும்பிற்குப் புறப்படும் என எதிர்பார்க்கப்படும் "கோமாரி" கப்பலில் தபால் பொதிகளும் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே வெளியூர்த் தபால்களை அஞ்சல் செய்ய விரும்புவோர் அவற்றை இன்று காலை 9 மணிக்கு முன்பாக யாழ். பிரதம தபாலகத்தில் இருக்கும் பெட்டியில் சேர்க்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (உ-162)

## ஆலங்கேணி விமானத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் யாழ்ப்பாணம் வந்துள்ள ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த திருமதி லீவர் எமா இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

இவர் ஜேர்மன் நாட்டிலுள்ள "டோற்மன்ற்" (DORTMUNT) தேவாலயத்தைச் சேர்ந்தவர்.

விமானத் தாக்குதல் சம்பவம் குறித்து திருமதி லீமர் எமா மேலும் விவரித்தபோது உதயனுக்குக் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா அரசின் அனுமதியுடன் எமது தேவாலயத்தைச் சேர்ந்த திரு. லைமக்கல் செல்வி டொறாத்தி ஆகியோரும் நானும் சனிக்கிழமை கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தோம்.

மெதடிஸ்த திருச்சபையின் மதகுருமாருடன் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள மக்களின் இன்னல்களையும், மெதடிஸ்த சபையின் செயற்பாடுகளையும் நேரில் அறிய விரும்பினோம்.

அதன் பொருட்டு அன்றிரவு 10 மணியளவில் யாழ்ப்பாணம் வரும் மக்களுடன் சேர்ந்து 'டிராக்டர்' ஒன்றில் நாம் படகுத்துறையை நோக்கி வந்து கொண்டிருந்தோம்.

துறையை அண்மித்துக் கொண்டிருந்த வேளை, சிலர் அங்குள்ள சிறு மரங்கள், பற்றைகளுக்குள் பதுங்கியிருந்ததைக் கண்டேன். "டிராக்டர்" சாரதி வாகனத்தை நிறுத்தினார். டிராக்டரில் இருந்தவர்கள் வேகமாகக் குதித்து பற்றைக்குள் பதுங்கினார்கள்.

எனக்கு ஒரு கை இயல்பாக இயங்காத காரணத்தினால் என்னால் உடனே குதிக்க முடியவில்லை. டிராக்டர் நின்ற சிறிது நேரத்தில், தூரத்தே ஹெலி சுடும் சத்தம் கேட்டது. அச்சத்தம் கேட்டதும் என்னுடன் வந்தவர்களும் சாரதியும் சேர்ந்து என்னைப் பிடித்துக் கீழே இறக்கினர்.

### டிராக்டரைச் சுற்றி......

உடனே டிராக்டரின் கீழ் பதுங்கிக் கொண்டேன். சில நிமிட நேரத்தில் டிராக்டரைச் சுற்றி சுமார் 200 யார் தூரத்தில் நெருப்புக் கோளங்கள் போன்ற (கிரனேட்) குண்டுகள் வந்து விழுந்தன. எனினும் நான் எவ்வித காயமும் இன்றித் தப்பிக் கொண்டேன் ஹெலி அதன் பின்னர் சென்று விட்டது.

என்னுடன் வந்த இருவரும் தாம் கிளிநொச்சிக்குத் திரும்பப் போவதாகக் கூறினார்கள். நான் யாழ்ப்பாணம் செல்லவே விரும்புவதாக அவர்களிடம் தெரிவித்தேன்.

### விமானம் உறுமியது

அவ்வாறு கதைத்துக் கொண்டிருந்த போது விமானம் உறுமும் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. சகலரும் பாதுகாப்புத் தேடினர். நாங்கள் வந்த டிராக்டர் மீது விமானம் தாக்கக் கூடும் எனக் கூறினார்.

உடனே நாங்கள் மரம் ஒன்றின் கீழ் பாதுகாப்புத் தேடிக் கொண்டோம். அப்போது பயங்கரச் சத்தம் காதைப் பிளந்தது. பெரும் வெளிச்சமும் தெரிந்தது

கடவுளைப் பிரார்த்தித்தபடியே மற்றவர்களுடன் மரத்தின் அடியில் படுத்திருந்தேன். சிறிது நேரத்தில் விமானம் சென்றுவிட்டது. அது செலுத்திய "றொக்கட்" எங்கே விழுந்தது என்பது தெரியவில்லை உயிர் பிரிந்து மீண்ட உணர்வு வந்தது

என்னுடன் வந்த இருவரும் யாழ்ப்பாணம் வர விரும்பாது கிளிநொச்சிக்குத் திரும்பினர்.

யாழ்ப்பாணத்து மக்களும் இத்த ஆபத்துக்களின் மத்தியில் தானே போக்குவரத்துச் செய்கிறார்கள் என்று கூறி தான் படகுப் பயணத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்தேன்

படகில் ஏறுவதற்கு வந்த போது, ஒரு மத்திய வயதுப் பெண்ணும், இளம் பெண் ஒருவரும் பயத்தினால் கைகள் உதறியபடி நின்றதைக் கண்டேன்.

இங்குள்ள மக்கள் போக்குவரத்தின் போது எவ்வளவு [illegible] பதை நேரில் அறிந்து கொள்ள [illegible] கூறிமுடித்தார் (அ-3)

## துப்பாக்கி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தேர்தலில் விருப்பமே இல்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாத தேர்தல் எதைச்சாதிக்க முடியும் என்று பொதுமக்களே கேள்வி கேட்பதாக 'ராய்ட்டர்' செய்தி தெரிவிக்கின்றது.

இலங்கையில் அமைதி திரும்புவதாக உலகுக்குக் காட்டிக் கொள்ளவும்—

புலிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை எனக் காட்டிக் கொள்ளவுமே அரசு தேர்தலை நடத்துவதாகவும் செய்தியாளர்கள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-த)

## திருமலை,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்று காலையே ஒரு தொகுதி பயணிகளுடன் அக்கப்பல் திருகோணமலைக்குத் திரும்பிச் செல்லும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இந்த சேவை விசேடமாக நடத்தப்படுவதாகவும்—

தமது அமைப்புகப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்திய பின்னர் மனிதாபிமான அடிப்படையிலான தேவைகளுக்கென கப்பல் சேவை ஒன்று தொடர்ந்து நடத்தப்படும் என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் அலுவலக அதிகாரி திரு செற்றிக் பிரலா தெரிவித்தார். (உ-3-5)

## வாக்காளர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபகரிக்கும் சம்பவங்கள் பரவலாக இடம் பெற்றிருப்பதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக இராணுவத்தரப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

ஆனால்—

இந்த நடைமுறையின் மூலம் வாக்காளர் அட்டைகளைப் பெறவோ அல்லது வாக்களிக்காமலோ தேர்தலைப் பகிஷ்கரிப்போரை படையினர் அடையாளம் காணவும்—

வாக்களிக்காமல் விடும் பொதுமக்களின் வாக்குகளை தவறான முறையில் [illegible] ர் பிரயோகிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும் [illegible] கூறப்படுகிறது. (உ-3)

யாழ்ப்பாண மாநகரசபை
கேள்வி அறிவித்தல் 1994
விடுமுறைச் சந்தை

இடம்:- மின்சார நிலைய வளவு

மேற்குறித்த விடயம் தொடர்பான 17-02-94 ஆம் திகதிய விளம்பரத்தின் பிரகாரம் பின்வருமாறு கால எல்லைகள் நீடிக்கப்படுகின்றன:-

படிவம் வழங்கும் இறுதித் திகதி — 09-03-1994 பிற்பகல் 3.00 மணி

படிவம் ஏற்கும் இறுதித் திகதி — 11-03-1994 நண்பகல் 12 00 மணி

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களை யாழ்ப்பாண மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 28-02-1994. (இ/7291)

யாழ். பல்கலைக்கழகத்தின்
யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களின்
ஆதரவுடன்
யாழ் பல்கலைக்கழக
கலைப்பீட மாணவரவை
வழங்கும்
பொய்க்கால் (நாடகம்)
(18ஆவது தடவையாக மேடையேறுகிறது)

இடம்: யாழ் இந்துக கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்: நாளை 02-03-1994 (புதன்கிழமை)
நேரம்: பிற்பகல் 2-30-4-30 (இரு காட்சிகள்)
பிரவேச அன்பளிப்பு: ரூ 10/= மட்டும்

விளம்பர அன்பளிப்பு:
ஆனந்த்ஸ் புத்தக நிலையம்,
21/B, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (29685)

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் காந்திநாதன்

(உரிமையாளர் "சோமநாகம்ஸ்" மில் படல்கம)

காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகக் கொண்ட சோமசுந்தரம் காந்திநாதன் அவர்கள் 27-2-1994 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் நாகம்மா தம்பதிகளின் அன்புமகனும் சுசிலாதேவியின்(ஆசிரியை), அன்புக் கணவரும் மீனலட்சுமி, பார்க்கவி, பைரவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி க. காந்திமதி திருமதி மு. காந்திதேவி காலஞ்சென்ற காந்திராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா, திருமதி க. லோகநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி லோ. கந்தையா

கோணாமலை லேன்,
கொக்குவில் கிழக்கு. (29693)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org